# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 செப்டம்பர் திங்கள் 30.09.2013–ம் நாள் திங்கள்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய உள்பக்கம் பயணிகள் இருக்கைகள் மற்றும் பேருந்து நிலையம் பராமரித்தல், குடிநீர் வசதி, பேருந்து கால அட்டவணை அமைத்து பராமரித்தல், கண்காணிப்பு கேமரா பொருத்துதல் போன்ற பணிகள் செய்யவும் அதற்கான ஈடாக பேருந்து நிலைய தூண்கள் மற்றும் சுற்றுச்சுவர்களில் விழிப்புணர்வு வாசகங்களுடன் விளம்பரம் செய்து கொள்ளவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரிய வகையில் மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.3,840/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1403/2013)

**தீர்மானம் எண்.704 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் திட்டப்பணிகள் நிதி ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை மாலை முரசு தொழில் மலர் 2013–ல் வெளியிட்ட வகையில் ரூ.10,000/– ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்.705 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியிலுள்ள புதிய சர்வர் கணனியின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) 31.08.2013–வுடன் முடிவடைகிறது. AMC எடுத்துக் கொண்ட HCL நிறுவனத்தார் கடந்த ஒரு வருடமும் நல்லமுறையில் பழுது நீக்கி தந்துள்ளார்கள். தற்போது 01.09.2013 முதல் 31.08.2014–க்கான AMC புதுப்பித்துக் கொள்ள கடிதம் வரப்பெற்றுள்ளது. அவசர அவசியம் கருதி AMC ஏற்படுத்திக் கொள்ள ரூ.13,913/–க்கு மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544/2006)

**தீர்மானம் எண்.706 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 17–வது வார்டு நரிக்கல் பகுதியில் N.–23–ல் 2.500 சென்ட் வழிப்பாதை இடத்தினை திரு.மகேஸ்வரன், கதவு எண்.17/135, நரிக்கல், (2) திருமதி.விஜி, நரிக்கல், (3) திருமதி. செல்லத்தங்கம், நரிக்கல், (4) திருமதி. அகிலா, கதவு எண்.29/108.எ. நரிக்கல், (5) திருமதி. உஷாராணி, நரிக்கல், (6) திருமதி. செல்வி, நரிக்கல், (7) திரு.சேகர், நரிக்கல் ஆகியோர் சேர்ந்து வழிப் பாதைக்காக நன்கொடை பத்திரம் எண்.

1199/2013–ன்படி, நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளனர். எனவே மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : நன்கொடை பத்திரம் பெற்ற இடத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/2425/2013)

**தீர்மானம் எண்.707 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013–14–ன்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் பழுதடைந்த பயணிகள் நிழலகத்தை மாற்றி, புதிய நிழலகம் கட்டுவதற்கு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நடவடிக்கைகள் ஆ3/1784/2013 நாள் 31.07.2013–ன்படி நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 04.10.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/1320/2013)

**தீர்மானம் எண்.708 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை, ஆசாரிமார் கீழத்தெரு, முகைதீன்பள்ளி ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளை Flushing செய்தல், வயரிங் மற்றும் மோட்டார் சரி செய்தல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 552, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | 0.75% மதிப்பீட்டை விட கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1708/13)

**தீர்மானம் எண்.709 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட்–க்கு எதிரில் பொது கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள தெருவில் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 591, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | **1.00%** மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.12% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1746/13)

**தீர்மானம் எண்.710 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளியாகுளம் மற்றும் சாஸ்தான்கரை பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்வதற்கு வெள்ளியாகுளம் அருகில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான கிணற்றிற்கு அருகாமையில் புதிதாக ஆழ்துளை கிணறு மற்றும் நீர்த்தேக்க தொட்டி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/– க்கு இந்நகர் மன்றத் தீர்மானம் எண். 585, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | **0.08%** மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | 0.67% மதிப்பீட்டை விட கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1707/13)

**தீர்மானம் எண்.711.அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 653, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 12.09.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | **0.01%** மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | 0.48% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2132/13)

**தீர்மானம் எண்.712 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட கொட்டில்பாடு–83, 88 மற்றும் களிமார்–82 (நரிக்கல்) அங்கன்வாடி மையங்கள் மற்றும் துறைமுகத்தெரு 3–ல், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010–11–ன் கீழ் கட்டப்பட்ட படிப்பகம் ஆகியவற்றிற்கு புதிதாக மின் இணைப்பு பெறுவதற்காக ரூ.6,400/– (1600 x 4) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.இ1/2940/2013)

**தீர்மானம் எண்.713 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் அங்கன்வாடி மையம் எண்.86–ல் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர், கழிப்பிட வசதிகள் மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 579, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.46% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1705/13)

**தீர்மானம் எண்.714 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட கன்னியாகுமரி – பழைய உச்சக்கடை (கொட்டில்பாடு முதல் சைமன்காலனி பாலம் வரை) பிரதான சாலையில் 4 இடங்களில் மற்றும் குளச்சல் – திருவட்டார் (வி.கே.பி. பள்ளி முதல் காந்தி ஜங்சன் வரை ) சாலையில் 12 இடங்களில் வேகத்தடைகள் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.7,84,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 572, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.02 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.21% மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.21% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/285/13)

**தீர்மானம் எண்.715 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான 96 எண்ணங்கள் 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சக்கரம் மற்றும் மேல் மூடியுடன் கூடிய HDPE பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் வினியோகம் செய்வதற்காக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழின் 18.09.2013–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.5,600/– ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2464/13)

**தீர்மானம் எண்.716 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் வார்டு எண்.13 மற்றும் 14–க்கு உட்பட்ட பகுதியில் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள மீனவர் ஓய்வறையின் பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 655, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 12.09.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.21% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.62% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.21% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1808/13)

**தீர்மானம் எண்.717 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு அல்லேசியார் ஆலயம் அருகில் நீர்த்தேக்கத் தொட்டி ( Mini Power HDPE Tank) அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.25,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 573, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 27.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.74% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1110/13)

**தீர்மானம் எண்.718 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் அழகனார்கோட்டைவிளை அருகில் கணியாகுடியில் இருந்து பாம்பூரி வாய்க்கால் செல்லும் சாலையில் வடிகால் ஓடையில் கழிவுநீர் தேங்கி வெளியே செல்ல முடியாமல் சாலையின் மேற்பரப்பில் தேங்கி நிற்பதால், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே பொது நலனை கருத்தில் கொண்டு மேற்படி தெருவில் வடிகால் ஓடையினை சரி செய்து, பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,10,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3157/13)

**தீர்மானம் எண்.719 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் வார்டு எண்.12 மற்றும் 13 –ல் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு உருவாகும் சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு வடிகால் மற்றும் சுத்திகரிப்பு தொட்டி அமைத்து Root Zone முறையில் கழிவுநீரை சுத்திகரித்து கடலில் சேர்த்திடும் வகையில் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,20,000/– க்கு இந்நககர் மன்றம் தனது தீர்மானம் எண். 676, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.09.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.02% மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2257/13)

**தீர்மானம் எண்.720 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் தும்பக்காட்டுவிளை குறுக்கு தெருவில் கிரி தங்கம் மருத்துவமனை பின்புறம் உள்ள தெருவில் மழைநீர் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் பொது சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி வடிகால் ஓடையின் தரையினை புதுப்பித்து மேல்மூடி மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,20,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3158/13)

**தீர்மானம் எண்.721 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சி காமராஜர் பேருந்து நிலைய பராமரிப்பு பணிகள் மற்றும் விளம்பரம் தொடர்பான பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.592 நாள் 30.05.2013–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.09.2013 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. ராஜு,<br>ஸ்ரீ வெங்கடேஷ்வரா பப்ளிசிட்டி,<br>112/82.B.தோப்பு வணிகர் நடுத்தெரு,<br>மீனாட்சிபுரம், நாகர்கோவில். | மதிப்பீட்டை விட 444% கூடுதல். |
| 2. | திரு. முத்துகுமார், A.M.Advertisement,<br>191.A.ஆசாரிமார் வடக்கு தெரு,<br>மீனாட்சிபுரம், நாகர்கோவில். | மதிப்பீட்டை விட 424% கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 444% கூடுதல் மதிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ராஜு, ஸ்ரீ வெங்கடேஷ்வரா பப்ளிசிட்டி, நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.அ1/1403/13)

**தீர்மானம் எண்.722 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, 9, 10, 11, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் தெருக்கள் மற்றும் சாலை ஓரங்களில் அதிக அளவில் வளர்ந்துள்ள புல் செடிகள் மற்றும் முட்புதர்களில் விஷ ஜந்துக்களும், பாம்புகளும் நடமாடுவதால் அப்பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு இடையூறாகவும், அச்சுறுத்தலாகவும் உள்ளதாக சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதிகளிலும், இந்நகராட்சிக்குட்பட்ட இதர வார்டு பகுதிகளிலும் காணப்படும் புல் செடிகள் மற்றும் முட்புதர்களை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2782/13)

**தீர்மானம் எண்.723 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சியில் பணிகள் நடைபெறும் இடங்களிலும், ஆய்வு மேற்கொள்ளும் போதும் பயன்படுத்துவதற்காக, தேவையான பாதுகாப்பு உபகரணங்களை இருப்பில் வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் மே.கு.ந.க.எண்.53/2010/பி1 நாள் 24.08.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்காணும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,900/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(1) Safety Helmet - 12 Nos.
(2) Reflective Vest - 12 Nos.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2814–1/13)

**தீர்மானம் எண்.724 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN-74-Z.5304 –ன் பழுதடைந்த முன்பக்க இரண்டு டயர்கள் மற்றும் டியூப்களை புதிதாக மாற்றுவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.32,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.562 நாள் 15.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்காக 20.06.2013, 28.06.2013. 04.07.2013 மற்றும் 12.07.2013 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாததால், பணியின் அவசர அவசியம் கருதி, பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு பட்டியல் தொகை ரூ.25,500/– ஐ வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்.725 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 23**

குளச்சல் நகர்மன்றத்தின் 3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.

குளச்சல் நகராட்சிப்பகுதி மக்கள் வருமானச் சான்றிதழ், ஜாதிச்சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், திருமண உதவித்தொகை, பட்டா மாறுதல் போன்ற சான்றிதழ்களை பெறுவதற்கு ஆன் லைன் மூலம் விண்ணப்பம் செய்ய 4 கி.மீட்டர் துாரமுள்ள இலட்சுமிபுரம் மற்றும் பாலப்பள்ளம் பகுதிகளில் அமைந்துள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை தேடி செல்கின்ற நிலைமை உள்ளது. நகர மக்களின் நன்மையைக் கருதி, நகர மக்கள் அலைச்சலின்றி சான்றிதழ்களை பெறுவதற்கு வசதியாக குளச்சல் நகர்மன்ற அலுவலகத்தில் ஆன் லைன் சென்டர் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், மாவட்ட நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.726 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

குளச்சல் நகர்மன்றத்தின் 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ. ரஹீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.

குளச்சலில் இருந்து கேரளா செல்லும் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக ரெயில் பயணம் மேற்கொண்டு வருவதால், பயணிகள் நலன் கருதி குளச்சல் பஸ் நிலையத்தில் ரெயில் பயணம் முன்பதிவு நிலையம் அமைப்பதற்கு தென்னக ரயில்வே துறையை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.727 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி